SBI
The banker to every Indian

## செய்யக் கூடியவை

1. எங்கள் வங்கி இணையதளங்களின் யூ ஆர் எல்-ஐ நினைவில் வைத்துக் கொள்ளவும் [(https://bank.sbi), (https://onlinesbi.com), எங்கள் வங்கியின் பயன்பாடுகளை உபயோகிக்கும் முன் எப்போதும் “HTTPS” அல்லது பேட்லாக் உள்ளதா எனச் சரிபார்க்கவும்.

2. குறைந்தபட்சம் ஒரு எண், ஒரு சிறப்பு எழுத்துடன் பெரிய மற்றும் சிறிய எழுத்துக்களின் கலவையுடன் குறைந்தபட்சம் 8 எழுத்துகள் கொண்ட உங்கள் கடவுச்சொல்லை வலுவாகவும் எளிதற்றதாகவும் வைத்துக் கொள்ளவும். உங்கள் கடவுச்சொற்களை அடிக்கடி மாற்றிக் கொள்ளவும்.

3. எங்கள் ஆப்களை (YONO SBI, YONO Lite SBI, BHIM SBI, SBI Quick) கூகுள் பிளேஸ்டோர் / ஐஓஎஸ் ஆப் ஸ்டோரிலிருந்து மட்டுமே நிறுவ வேண்டும்.

4. ஒரு யூபிஐ பின் அல்லது க்யூ ஆர் குறியீட்டின் ஸ்கேன், பணம் பெறுவதற்கு அல்லாமல், பணப் பரிமாற்றம் செய்யும்பொழுது மட்டுமே தேவைப்படும் என்பதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளவும்.

5. எஸ்பிஐ வங்கியால் அனுப்பப்படும் பரிவர்த்தனை சார்ந்த / விளம்பரம் சார்ந்த செய்திகள் எப்போதும் "SBI, SB" என்ற சிறு குறியீடுகளுடனேயே இருக்கும், உதா: SBIBNK, SBIINB, SBYONO, ATMSBI.

6. குறுஞ்செய்தி அறிவிக்கைகள் உங்களுக்கு தொடர்ந்து அனுப்பப்படுவதை உறுதிசெய்ய, உங்கள் மாற்றப்பட்ட மொபைல் எண்ணை வங்கிக்குத் தெரியப்படுத்தவும்.

## செய்யக்கூடாதவை

1. பயனர் பெயர், கடவுச்சொல், ஓடிபி, கார்டு எண், சிவிவி, பின் (ரகசிய எண்) ஆகிய உங்கள் தனிப்பட்ட/நிதி விவரங்களை வங்கியின் பிரதிநிதிகள் உள்பட எவருடனும் பகிர வேண்டாம்.

2. எல்லா கணக்குகளுக்கும் பொதுவான கடவுச்சொற்களை பயன்படுத்த வேண்டாம்.

3. வங்கி பரிவர்த்தனைகளை மேற்கொள்ள திறந்தவெளி / பொது வைஃபையுடன் இணைய வேண்டாம்.

4. அந்நியர்களின் ஆலோசனையின் பேரில் எந்த ஆப்-ஐயும் நிறுவ வேண்டாம்.

5. கடவுச்சொற்கள், எம்பின் (MPIN), கணக்கு எண்கள் ஆகிய முக்கியமான தகவல்களை உங்கள் கைபேசியில் வைத்திருக்க வேண்டாம்.

6. வங்கியிலிருந்து வந்ததாகவோ அல்லது வங்கியின் சார்பில் அனுப்பப்படுவதாகவோ கூறி, குறுஞ்செய்தி/மின்னஞ்சல்கள்/சமூக வலைதளங்களில் பதிக்கப்படும் இணைப்புகளை கிளிக் செய்ய வேண்டாம்.



நினைவில் கொள்ளவும்: “தொலைபேசி அழைப்பு / குறுஞ்செய்தி / மின்னஞ்சல் மூலம் உங்கள் ரகசிய தகவல்களை ஒருபோதும் வங்கி கேட்பதில்லை.”

உதவிக்கு, எங்கள் ஹெல்ப்லைன் எண்களை அழைக்கவும்:

**1800-11-22-11/ 1800-425-3800/ 1800 1234**

**STAY #SAFEWITHSBI**